**13.07.2023 OS. 214/2022** வா.சா.1 – தேவதாஸ்

<u>1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

தாவா இடமானது 2 சர்வே எண்ணாக உள்ளது. சர்வே எண். 136-8பி1 புஞ்சை நிலம், விவசாய நாட்களில் போக மீதி நாட்கள் காலியிடமாக இருக்கும். சர்வே எண். 136-8பி2 ரோடாக உள்ளது என்று சொன்னால் இல்லை. சர்வே எண். 136-8பி1 ரயத்து புஞ்சை என்று அதன் விஸ்தீரணம் 0.05.00ஏர்ஸ் என்று அரசு ஆவணங்களில் உள்ளது. சர்வே எண். 136-8பி2 ரயத்து புஞ்சை விஸ்தீரணம் 0.03.0 ஏர்ஸ் என்று காண்பிக்கப்பட்டுள்ளது. எனது அப்பா அழகர். சர்வே எண். 136-8பி1 எனது அப்பா பெயரில் பட்டா உள்ளது. சர்வே எண்.136-8பி2 பூஸ்துதி ரோடு என்று பட்டா உள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனது அப்பா எனக்கு 21.02.2022ம் தேதி தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்தார். மொத்த சொத்துக்கும் எனது அப்பா எழுதி கொடுத்தார். எனது அப்பா உட்பட கிராமத்தார்கள் சர்வே எண். 136-8பி2ல் கிராமத்துக்கு செல்வதற்கு பாதை அமைக்க அரசுக்கு எழுதிகொடுத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. அந்த சாலை தார்சாலையாக பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்யவேண்டி நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யவில்லை. மேற்படி சாலையை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதை கண்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து எனது அப்பாவுக்கு பூர்வீக பாத்தியம். எனது ஐயாவிற்கு கிரைய சொத்து. எனது அப்பா எனக்கு எழுதி கொடுத்த தானபத்திரத்தில் மேற்படி ரோட்டை நான்குமாலில் காட்டியுள்ளாரா என்று சொன்னால் இல்லை. மேற்படி எனக்கு எழுதிகொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணபடி எனது பெயரில் பட்டா மாற்றவேண்டி மனு கொடுத்தேன், அதன்படி சர்வே நம்பர். 136-8பி1-க்கு மட்டும் எனது பெயரில் பட்டா மாறியுள்ளது. சர்வே எண். 136-8பி2 வழக்கு தாக்கல் செய்யும்போதே பூஸ்துதி பாதை என்று உள்ள விபரம் எனக்கு தெரியும். நான் **B.A.English lit.** படித்துள்ளேன். பூஸ்துதி பாதை என்றால் அது பொதுமக்கள் பயன்பாட்டிற்குரிய பாதை என்று எனக்கு தெரியும். பூஸ்துதி பாதை என்று தெரிந்து கொண்டபிறகு பொதுமக்கள் பயன்பாட்டில் இருப்பதால் கிராம

பிரதிநிதி ஸ்தானத்தில் வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. பாதையை மாற்றம் செய்யவேண்டி வழக்கு போட்டிருப்பதால் ஊர்கிராமமக்களை தரப்பினர்களாக சேர்க்கவேண்டும் என்றும், தலவிசாரணை அவசியம் என்றும் சொன்னால் சரியல்ல. நடேசபுரம் எனது பூர்வீக ஊர். தாவா இடம் புலியடிதம்மம் ஊராட்சி மன்றத்தை சேர்ந்தது. அந்த பாதை ஊராட்சிமன்ற கட்டுப்பாட்டில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. கிராம ஊராட்சிமன்ற தலைவர், கிராம முக்கியஸ்தர்களை வழக்கு தரப்பினராக சேர்த்தால் தான் உண்மை நிலவரம் தெரியவரும் என்று சொன்னால் சரியல்ல. ஆவணத்தின் படியும், அனுபவத்தின் படியும் பூஸ்துதி பாதையாக பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. கிராம மக்கள் பயன்படுத்தும் பூஸ்துதி பாதையை தனக்கு பாத்தியப்பட்டதாக உரிமை கோரமுடியாது என்று சொன்னால் சரியல்ல. பொதுமக்கள் அனுபவம் செய்வதையும் எந்தவிதத்திலும் தடை செய்யமுடியாது என்று சொன்னால் சரியல்ல. 5ம் பிரதிவாதி காண்ட்ராக்டர் எடுத்து பணி செய்து வருவதை தடுக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. 5ம் பிரதிவாதியும் தார் சாலை அமைப்பதற்கு முன் பணமாக ரூ.9,43,000/- அரசுக்கு வைப்பீடு செய்துள்ளார் என்றும், அதனடிப்படையில் தார்சாலை அமைக்க அவருக்கு அதிகாரம் உண்டு என்று சொன்னால் சரியல்ல. எனது அப்பா மற்றும் கிராமத்தார்கள் மனம் உகந்து அரசுக்கு கொடுத்த நிலையில் நான் அதை தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்ததை பயன்படுத்தி தடுத்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் பொதுமக்கள் பயன்பாட்டில் இருப்பதால் எனக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் இல்லை என்றும், கிராம மக்களை பகைத்துக்கொண்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண். 136-8பி2-ஐ பொறுத்த அளவில் எனக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

5ம் பிரதிவாதி மேற்படி குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.